**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**தொடர்பாடல் மற்றும் ஊடகக்கல்வி டிப்ளோமா – 2024 - (SLQF Level 03)**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தொடர்பாடல் மற்றும் ஆக்கக்கலைகள் துறையினால் நடாத்தப்படும் 2024 ஆண்டிற்கான **தொடர்பாடல் மற்றும் ஊடகக்கல்வி டிப்ளோமா** பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களானவை ஊடகங்களில் பணியாற்றும் இயைபான அனுபவமுள்ள விண்ணப்பதாரரிடமிருந்து கோரப்படுகின்றன. சுயாதீன ஊடகத்துறை சார்ந்தவர்கள், ஆக்கப்பூர்வமான எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனத் தத்தம் துறைகளில் தற்போது ஈடுபட்டுள்ளவர்களும் உள்வாங்கப்படுவர். ஊடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள், எதிர்காலத்தில் ஊடகத்துறையில் இணைய விரும்புபவர்களிடமிருந்தான மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பங்களும் கருத்திற்கொள்ளப்படும்.

**நுழைவு தகுதிகள்:** க. பொ. த உயர் தரத்தில் 3 பாடங்களிலும் சித்தியுடன் ஒரு வருட அனுபவம் அல்லது அதற்கு சமமான தகுதிகள் தேசிய தொழிற்தகைமைகள் (NVQ மட்டம் 4) அல்லது க. பொ. த சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தி அல்லது சமமான தகுதிகள் (திணைக்கள விதிகள் கருத்திற் கொள்ளப்படும்) மற்றும் தொடர்புடைய துறையில் 3 வருட அனுபவம் கொண்டவராக இருத்தல் வேண்டும். குறித்த துறையில் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சான்றிதழ் கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறித்த துறையில் 3 வருட அனுபவத்தினை உடையவராய் இருத்தல் வேண்டும்.

**கற்கைக் காலம்:** ஒரு வருடம் (விரிவுரைகள் சனிக்கிழமைகளில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 1.30 மணி வரை நடாத்தப்படும்.)

**கற்கைக் கட்டணம்:** ரூபா. 60,000/= (இலங்கைப் பிரஜைகளுக்கு), வெளிநாட்டவர்களுக்கு 600 ஐக்கிய அமெரிக்க டொலர்கள்

**மொழிமூலம்:** இக்கற்கையானது சிங்களமொழியில் நடாத்தப்படும். போதியளவிலான விண்ணப்பதாரிகள் இருப்பின் தமிழ் / ஆங்கில மொழிகளிலும் நடாத்தப்படும்.

**தெரிவு:** நேர்முகப்பரீட்சை மூலம்

**விண்ணப்பப்படிவம் அனுப்பும் முறை:**

விண்ணப்பப்படிவங்களை கொழும்புப் பல்கலைக்கழக இதழியல் பிரிவு இணையத்தளம் மற்றும் கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவக் கட்டணமாக ரூபா. 1000 ஐ வங்கியில் செலுத்தி வரவு வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவக் கட்டணம் திம்பிரிகஸ்யாய மக்கள் வங்கி கிளையில் கொழும்புப் பல்கலைக்கழகம், கணக்கு இலக்கம் **304081900003** இற்கு வைப்பு செய்யப்பட வேண்டும்.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை:**

**தொடர்பாடல் மற்றும் ஊடகக்கல்வி டிப்ளோமா – 2024**
கல்வி மற்றும் வெளியீட்டு பிரிவு,
த.பெ.இல. 1490,
கொழும்பு 03
என்ற முகவரிக்குச் சமர்ப்பிக்கவும்.

**குறிப்பு:** பல்கலைக்கழகச் சட்ட விதிகளின்படி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்வாரி மற்றும் / அல்லது வெளிவாரி மாணவராக இருக்கும்பட்சத்தில் வேறு எந்தவொரு பாடநெறியினையும் பதிவு செய்யலாகாது என்பதனைக் கவனத்திற்கொள்ளவும்.

**பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:** 2024.11.30

**இணையத்தள முகவரி:** https://arts.cmb.ac.lk/cca

**பதிவாளர்**